

# இளைஞர் நலன்
மற்றும்
# விளையாட்டு மேம்பாட்டுத் துறை

## மானியக் கோரிக்கை எண். 49

## அறிவிப்புகள்
## 2018–2019

# இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

## மானியக் கோரிக்கை எண் – 49

## அறிவிப்புகள்
## 2018–2019

**பா. பாலகிருஷ்ணா ரெட்டி**
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு
மேம்பாட்டுத் துறை அமைச்சர்

# இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அறிவிப்புகள் 2018–19

## 1. தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் ரூ.1500.00 இலட்சம் செலவில் விடுதி வசதிகள் அமைத்தல்.

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் மாணவர்களின் சேர்க்கை அதிகரித்து வருகிறது. ஆராய்ச்சி படிப்பில் பயிலும் மாணவர்கள், விடுதியில் தங்கிப் படிப்பது அத்தியாவசியமாக உள்ளது. தற்போதுள்ள விடுதி வசதிகள் போதுமானதாக இல்லை. எனவே, தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் விடுதி வசதிகள், **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூ.1500.00 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

## 2. தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் ரூ.160.00 இலட்சம் செலவில் பாரம்பரிய விளையாட்டுகளான களரிபயட்டு மற்றும் சிலம்பாட்டத்திற்கான பயிற்சி மையம் அமைத்தல்.

நமது பாரம்பரிய தற்காப்பு கலைகள், உடல் நலம் மற்றும் உடற்தகுதியினை மேம்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. எனவே, நமது பாரம்பரிய தற்காப்பு கலைகளான களரிபயட்டு மற்றும் சிலம்பாட்டக் கலையை அழிவிலிருந்து பாதுகாக்கவும் மற்றும் வருங்காலத்திற்கான ஆரோக்கியமான குடிமக்களை உருவாக்குவதற்கும் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் பாரம்பரிய விளையாட்டுகளான களரிபயட்டு மற்றும் சிலம்பாட்டத்திற்கான பயிற்சி மையம், **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூ.160.00 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

## 3. விளையாட்டுப் போட்டிகள் குறித்த தகவல்கள் மற்றும் செயல்பாடுகளை இணையம் மற்றும் கைப்பேசி மூலம் பெறுவதற்கும், பதிவு செய்வதற்கும் ஏதுவாக மென்பொருளை ரூ.33.00 இலட்சம் செலவில் உருவாக்குதல்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் ஆண்டுதோறும் நடத்தப்படும் மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள விளையாட்டு வீரர்கள் பங்கு கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர். இந்தப் போட்டிகள் பற்றிய தகவல்கள் மற்றும் செயல்பாடுகளை அனைத்து பிரிவினரும் அறிந்து கொண்டு பயன்பெறும் வகையில், **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூ.33.00 இலட்சம் செலவில் மென்பொருள் உருவாக்கப்படும்.

## 4. தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் ரூ.1000.00 இலட்சம் செலவில் மேசைப்பந்து விளையாட்டிற்கான முதன்மை நிலை மையம் அமைத்தல்.

சர்வதேச அளவில் மேசைப்பந்து விளையாட்டுப் போட்டியில் தமிழக வீரர்கள் அதிக அளவில் பங்கு பெற்று பதக்கங்கள் பெறுகின்றனர். அவர்கள் பயன்பெறும் வகையில் ஒரு மேசைப்பந்து அகாடமி தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில், **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூ.1000.00 இலட்சம் செலவில் துவக்கப்படும்.

## 5. தேசிய மாணவர் படை மாணவர்களின் உபயோகத்திற்கு ரூ.20.00 இலட்சம் செலவில் நகரக்கூடிய பசுமைக் கழிவறைகள் அமைத்தல்.

தேர்ந்தெடுக்கப்பட்ட தேசிய மாணவர் படை முகாம்களின் போது, குறிப்பாக கிராமப்புறங்களில் நடைபெறும் முகாம்களில் கழிவறை வசதி குறைவாக இருக்கின்ற காரணத்தினால் மாணவர்களின் பயன்பாட்டிற்காக ஒரு பசுமைக் கழிவறைக்கு (Bio-Toilet) ரூ.1.00 இலட்சம் வீதம் 20 நகரக் கூடிய பசுமைக் கழிவறைகள், **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூ.20.00 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

**6. தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் உடற்கல்வியியலை சிறந்த முறையில் போதிக்க, பரிசோதிக்க மற்றும் பயிற்சி அளிப்பதற்கு ரூ.22.05 இலட்சம் செலவில் கற்பிக்கும் கலை சோதனைக் கூடம் அமைத்தல்.**

பாரம்பரிய வழிமுறைகளை தவிர்த்து நவீன கல்விக்கான தேவைகளை பூர்த்தி செய்ய, அதிக அளவில் அறிவியல் தொழில்நுட்ப ஆதரவு தேவை. எனவே, தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் உடற்கல்வியியலை சிறந்த முறையில் போதிக்க, பரிசோதிக்க மற்றும் பயிற்சி அளிப்பதற்கு கற்பிக்கும் கலை சோதனைக் கூடம், **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூ.22.05 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

**7. அமராவதி நகரிலுள்ள சைனிக் பள்ளியின் தேசிய மாணவர் படை பயிற்சி உள்கட்டமைப்பை நவீனப்படுத்துவதற்காக ரூ.3.00 இலட்சம் செலவில் .22 துப்பாக்கி சுடுதல் பாவிப்பு கொள்முதல் செய்தல்.**

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், அமராவதி நகரில் செயல்பட்டுவரும் சைனிக் பள்ளியின் முதன்மை நோக்கமானது, மாணவர்களை முப்படைகளில் சேர்வதற்கு உத்வேகப்படுத்துவதேயாகும். இப்பள்ளியில் பயிலும் 676 மாணவர்களும் தேசிய மாணவர் படையில் சேர்வது கட்டாயமானது. எனவே, அமராவதி நகரிலுள்ள சைனிக் பள்ளியின் தேசிய மாணவர் படையினரின் துப்பாக்கி சுடுதல் பயிற்சிக்காக, **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூ.3.00 இலட்சம் செலவில் .22 துப்பாக்கி சுடுதல் பாவிப்பு கொள்முதல் செய்யப்படும்.

**பா. பாலகிருஷ்ணா ரெட்டி**
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு
மேம்பாட்டுத் துறை அமைச்சர்